

Mother Sarada, who is inseparable from Sri Ramakrishna as heat is from fire, and who is the embodiment of all wisdom

# தூய அன்னை ஸ்ரீசாரதாதேவியின் ஜன்ம தினம்

அன்று

17 – 12 – 2000

வெளியிடப்படுகின்றது.

With Best Wishes
From

## P. S. Sundaram & Sons

**Sri Lanka Agents for :**
Ananda Vikadan , Hindu, Indian Express, Sportstar, Frontline , IndiaToday, Cricket World & Kalki.

Telephone : 330661

**Post Box - 1639**
**75, Barber Street,**
**Colombo - 13**

---

With Best Wishes
From

- Nandas Colombo
- Uthayams Colombo
- Pyramid Air Services Ltd Colombo
- Ashtaluxmi Colombo

Uthayan
Valampuri
Virakesari
Thinakaran

# தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி

## (பல உயர்ந்த கருத்துக்களின் சங்கமம்)

உலகத்தில் வாழும் பலகோடி மக்களின் எண்ணங்கள் பல தினுசு என்பதை நமது தூயஅன்னை ஸ்ரீ சாரதாதேவி நன்கு அறிந்திருந்தார். ஒரு தாய் தனக்கு உள்ள ஐந்து பிள்ளைகளுடைய ஜீரணசக்தி ஏற்ப உணவு தயாரிப்பதுபோல அன்னை பல கோணங்களில் தமது வாழ்வை நெறிப்படுத்தினார்.

## புத்தசமய நெறி

புத்தசமயிகள் நான்கு நெறிகளை பகவர்

அ) உலகம் துன்பமயமானது

ஆ) துன்பங்களுக்கு காரணம் ஆசைகள்

இ) இத்துன்பங்களுக்கு அஞ்ஞானமே காரணம்

ஈ) நிர்வாணம் நிலை அடைவது, புத்தி உள்ளவர்கள் ஆற்றக்கூடிய செயல்

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி 67 ஆண்டுகள் இப்பூவுலகில் வாழ்ந்தவர். எவ்வேளையிலும் தனது மனதை உயர்ந்த நிலையிலே வைத்திருப்பார். உலகிடை பற்றுவைத்தால் துன்பம் தான் என்பதை பகர்ந்திருந்தார். ராது என்ற நெருங்கிய உறவினரைப் பற்றிய காரணத்தால் உலகிடை வாழ அவரால் முடிந்தது. இந்தப்பற்றுதலால் அவரது வாழ்க்கையை எப்பொழுது பார்த்தாலும் துன்பம் நிறைந்ததாகவே இருந்தது. ஆனால் இத்துன்பங்களை தகர்த்து எறிந்து மனத்தை இறைவன்பால் எப்பொழுதும் வைக்கும் இயல்பை இவரது சரிதம் நமக்கு தரும் பாடம். இவரது வாழ்க்கை நமக்கு ஒரு பெரிய அகல் விளக்கு.

## புத்தசமயம் அடிப்படை கருத்துக்கள்

அன்னை புத்தசமய கொள்கையை தமது வாழ்வு மூலம் நமக்கு எடுத்து இயம்புகிறார். உலகம் துன்பம் நிறைந்ததுதான். இன்பம் என்பது உலகிடை கிடையா இது ஒரு வெறும்வார்த்தை "ஆசையினால் பிறப்புக்கள் ஏற்படுகின்றன. துன்பம் என்றும் இராது. பாலத்தின் அடியில் ஓடும் நீரைப்போல் ஓடிமறைந்து விடும்."

புத்தசமயத்தில் சொல்லப்படும் கர்மா என்ற விதிக்கு அன்னை விளக்கமளிக்கிறார். "வாழ்வு அனித்தியமானது. இன்று இருந்தவர் நாளைக்கு இல்லை. ஒருவர் மறைந்ததும் அவர் பின்னே அவர் செய்த புண்ணியம் பாவம் பற்றித் தொடரும்" புத்த பகவானைப் போல் தியானம் செய்யும் படி சீடர்களை வற்புறுத்துவார். இவரும் தனது வாழ்வில் நீண்ட நேரம் தியானம் செய்யும் வல்லமை படைத்தவர் தியானமூலம் இந்த உலக பற்றுக்களை அறுக்க முடியும் என்பதை திடமாக நம்பினார்.

## கிறிஸ்தவ மதத்தின் கொள்கை

அன்னைதான் முதன் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் மகத்தான அவதாரம் என்று பகர்ந்தவர். 'ஸ்ரீராம கிருஷ்ணரிடம் பக்திவையுங்கள், வழிபாடு செய்யுங்கள் இலகுவில் யாவும் கிடைத்துவிடும்' என்றார். எல்லா தெய்வங்களையும் தன்னகத்தே அடக்கிய ஓர் பூர்ண அவதாரம்தான் ஸ்ரீராமகிருஷ்ணர். இவரை வழிபடுவ தால் மனிதன் முக்திபேற்றை எளிதில் அடைந்து விடுவான்.' அவதாரம் என்ற கூற்றை உணர்ச்சி வயப்பட்டு அவர் பகரவில்லை. அவர் தான் கண்ட தெய்வீகக்காட்சி மூலம் அவர் உறுதியாக இதை நம்பி னார். யேசு பகவான் எப்படி மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்ததை நாம் யாவரும் நம்புகின்றோமோ! அப் படியே அன்னை ஸ்ரீராமகிருஷ்ணரின் அவதாரத்தை முற்று முழுதாக நம்பினார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் மறைவுக்குப்பின் அன்னை அணிகலன்களை கழற்றி விதவைக்கோலம் பூணும் சமயம் ஸ்ரீராமகிருஷ்ணர் தோன்றி - " தான் இறந்த தாகக் கருதவேண்டாம் ஓர் அறையிலிருந்து இன்னும் ஓர் அறைக்கு போனது போலத்தான் என்று கருதுவா யாக " என்றார் "யான் விட்டபணியைத் தொடர்ந்து செய்வாயாக" சீடர்களுக்கு தீட்சை கொடுப்பாயாக எனது அமுத மொழிகளை மக்களிடை பரப்புக" என்றார்.

மனிதனின் மோட்ச சாம்ராஜ்பத்தின் திறவுகோல் அவாதாரமிடையே உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணர் யேசு பெருமானைப்போல் மீளாத்துயரத்தை அனுபவித்து மக்களுக்கு விமோசனத்தை ஈந்தார். ஸ்ரீராமகிருஷ்ணர் தமது இறுதிக்காலத்தில் தாங்கொணாத புற்று நோயால் அவதியுற்றபொழுதும் ஒருவித முகவாட்டமும் இல்லாது கல்கத்தாவில் புழுப்போல் உலகிடை மூழ் கிய மக்களின் துயரம் தீர்க்க தாமே வீடு வீடாகச் சென்று ஞானத்தீயை ஏற்றினார்.

யேசுபெருமான் கூறியமாதிரி " தன்னைச் சரண் அடைந்தவரை இறுதிக்காலத்தில் கரையேற்றுவது தனது தலையாய பணி " என்றார். பாவம் செய்தவர் புண்ணியசீலர், ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு காட்டாது ஸ்ரீராமகிருஷ்ணர் உங்கள் யாவரையும் கரையேற்ற வந்த உத்தம புருசர். ஆகவே கவலையை விட்டொழிக ' என்றார் நமது அன்னை.

உலகப்படைப்பு பற்றி யேசுபெருமான் பைபிளில் கூறியது போன்று அன்னை பகர்ந்துள்ளார்.

முதலில் கடவுள் மனிதனைப் படைத்த பொழுது நல்ல குணங்களைத்தான் இவர்களுடன் பிணைத்தார். ஆகவே புத்தியுள்ள மனிதர்கள் உலகம் அநித்திய மானது என்று அறிய அதிககாலம் அவகாசம் தேவைப் படவில்லை. உடனே இறைவனைப்பற்றி தியானம்

செய்து முடிவில் யாவரும் கடவுள் பாதம் அடைந்தார்கள். இப்படியானால் உலக வாழ்வு அதிககாலம் நீடிக்காது. இறைவன் சற்று சிந்தித்துவிட்டு நல்ல குணாதிசயங்களுடன் உலகமாயை, போலித்தன்மையைக் கலந்து உலகத்தை மீண்டும் படைத்தார். அந்தோ மனிதன் உலகத்தின் மாயையில் சிக்கி தவிக்க நேரிடும் பொழுது உலகபடைப்பும் அலகிலா விளையாட்டும் தொடர்கிறது. யாவரும் கிறிஸ்தவ சமயத்தில் பாபி (Originalsin) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னை மாயையினால் பொருட்கள் வேறுதோற்றத்தை தருகின்றது. ஆனால் பொருட்களின் உண்மைத் தோற்றம் அதுவல்ல. பாவமூட்டை என்று ஒன்று உண்டு. ஆனால் அன்னை மனிதன் நிரந்தரமான பாபி அல்ல ஜபம், தியானம், சேவைமூலம் பாவம் ஈற்றில் மறைந்து விடும்'' என்கிறார். ஸ்ரீராமகிருஷ்ணரை ஒருமுறை அழைத்தால் போதும் ஓடோடி வந்து இரட்சிப்பார். அன்னையிடம் ''தாங்கள் யார்'' என்று வினாவிய பொழுது ..................

'' ஸ்ரீராமகிருஷ்ணரின் மறுபாதி நான். ஸ்ரீராமகிருஷ்ணர் சூக்கும வடிவில் என்னில் கலந்து விட்டார் என்று அவரே என்னிடம் பகர்ந்தார். பரிசுத்த ஜோன்—இவர் வாழ்க்கையில் நெறி தவறிய ஒரு மாதுவின் கதையை யாவரும் அறிந்திருப்பர். அன்னையிடத்தில் ஒரு நெறிதவறிய மங்கையை நெருங்கவிடாது பக்தர்கள் பார்த்தனர் அப்பொழுது அன்னை ''எனது குழந்தை அசுத்தத்தில் வீழ்ந்துவிட்டால், அதனை எடுத்து குளிப்பாட்டி தூய்மைப்படுத்துவது' எனது பொறுப்பு'' என்பார் ''நான் தீட்சை கொடுத்ததும், தீட்சை பெறுபவரின் பாவங்களை ஏற்று துன்பப்பட நேரிடும். இதற்காகத் தான் நான் இப்பூவுலகுக்கு வந்தேன் இதைத் தவிர இனிப்பு பண்டங்களை (Rasagolla) நுகர யான் வரவில்லை. முடிவில் உடல் அழிந்து விடும், இன்னும் ஒருவருக்கு சேவை செய்து உடல் அழிந்தால் என்னே?'' என்பார்.

யேசுகிறிஸ்து சொன்னது போல் ''உமது எதிரிகளை மன்னித்து ஆசிர்வதிப்பீராக'' அதே போன்று தூய அன்னைகடவுளிடத்தில் பூரண நம்பிக்கையும் விசுவாசம் வையுங்கள், அயலவர்களையும் அன்புடன் நேசியுங்கள் தமது இறுதிக்காலத்தில் ''உலகனைத்தும் நமதே'' இவ்வுலகத்தில் வேண்டத்தக்கவர் வேண்டாத்தகாதவர் என்று ஒருவரும் கிடையாது என்றார்

சாதனை புரிவதில் அன்னைக்கு நிகர் அன்னையே. 10 இலட்சம் தரம் ஜபம் ஒரே தரத்தில் செய்வார். ''இறைவனிடத்தில் சரண் அடைந்தால் பேரின்பம் கிட்டும். இறைவனிடத்தில் சரண் அடைந்தால் என்றும் காப்பாற்றப்படுவோம்'' என்பார். அன்னைக்கு அபூர்வசக்திகளில் (Miracles) இதில் பெரிதும் ஆர்வம் கிடையாது.

அவரே சொல்லுவார் ''என்ன கடவுளை அடைந்து விட்டால் இரண்டு கொம்புகள் முளைத்து விடுமா'' தூய பக்தியினால் இறைவனின் கடாட்சத்துக்கு நிச்சமாக ஆட்படுவோம் என்பார். யேசு சொன்னார் ''நீ தூய்மை அடைந்தால் தேவனுடைய ராஜ்யத்தின் உள் பிரவேசிக்கலாம், தேவனுடையராஜ்யம் உன்னுள்ளே இருக்கிறது. ''உலகத்தில் பிறவியின் நோக்கம் இறைவனை அடைதலும் அவனது நினைவில் மூழ்கி இருத்தலே ஆகும்'' என்பார் அனனை.

## முகமதியர்களின் சமயக் கோட்பாடு

இஸ்லாம் சமயத்தில் சரணாகதி முதல் இடத்தை வகிக்கிறது இந்த சமயத்தின் அடிப்படை

1. முகமது நபி தான் இறுதித் தூதுவர்
2. ஒரே ஒரு கடவுள் தான் உண்டு
3. தினமும் வழிபாடு இயற்றுதல், தானம் வழங்குதல்
4. ஸ்தல யாத்திரைக்கு முக்கியத்துவம்.

அன்னை இறைவனிடம் சரண் அடைவாயாக என்று பல தடவைகள் கூறியுள்ளார். வாலிப வயதில் தீர்த்த யாத்திரை செய்தல், ஜபம், தவம், தியானம், பணம் சம்பாதித்தல், இவையாவும் அவசியம் என்று கூறுவார். மூப்பு வந்ததும் மனம் சோர்வடைவதும், வியாதி வருவதும் சகஜம். அவரதுவாழ்வு இவை யாவுக்கும் ஒரு நிலைக்கண்ணாடியாக அமைந்துள்ளது.

## சமண சமயம்

தீர்தங்கார என்பவர் மக்களின் ஆத்மீகப்படகை மறு கரைக்கும் கொண்டு செல்லும் (சம்சாரக் கடலைக் கடக்க உதவுபவர்) மாமுனிவர். இவர் வணக்கத்துக்கு உரியவர். அன்னை அடிக்கடி இயம்புவார் ஸ்ரீராமகிருஷ்ணர் உலகிடை அவதாரம் செய்த நோக்கம் மக்களை சம்சாரக்கடலில் மூழ்கி விடாமல் காப்பாற்றி அக்கரைக்குகொண்டு சேர்ப்பதற்காகவே. ஆகவே மனிதன் இவ்வுலகில் ஆற்றவேண்டிய உயரிய பணி மற்றவர்களுக்கு மனதில் துன்பம் ஏற்படாவண்ணம் இருப்பதே ‘ ஒருகால் வழங்காதவரைப் பார்த்து நொண்டி என்று ஒருக்கால் சொல்லி அவரின் மனத்தைப்புண்படுத்தாதே’ என்பார்?

## சூபி சமயம் அல்லது மார்க்கம்

அன்னை வாழ்வு ஒரு ஒப்பற்ற உதாரணமாக இங்கு திகழ்கிறது. சூபி மார்க்கதில் இருக்கும் ஒருவர் பல வித இல்லறக் கடமைகளைச் செய்யினும் இறைவனே ஒரு போதும் மறப்பதில்லை. அன்னை ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் வைத்துள்ள அன்புக்கு நிகராக ஒரு மனைவியை இவ்வுலகில் காண்பது அரிது. தூயஅனை ஸ்ரீசாரதாதேவியின் கூட்டத்தில் சித்த சுவாதினம் உடைய மாது, உலகியல் ஆசை பிடித்த இனத்தவர்கள், பலஅடியார்களுக்கு தினமும் உணவளித்தல் இன்னோரன்ன பணிகள் மத்தியிலும் இறைநாம

ஜபமும் நிறை சிந்தனையுடையவராகவே திகழ்ந்தார் ஒருவர் கேட்ட கேள்விக்கு அன்னை-‘ நான் நினைத்த மாத்திரத்தில் எனது சுயமான தன்மை (பராசக்தி) என தெட்டத்தெளிவாகத் தெரியும் ஆனால்அடுத்தநிமிடம் நான் அதனை மறந்து விடுவேன் அப்படி செய்யாவிடில் உலக மக்களுக்கு நான் எப்படி உதவ முடியும்’ என்பார்.

தூய அன்னை ஆத்மீக உயர்வு அளவிட முடியாதது. அவர் ஸ்ரீராமகிருஷ்ணர் போல் வெளிப்படையாக சாதனை செய்யவில்லை. அவர் இலைமறை காய் போல் இருந்து அதி உன்னத நிலையை அடைந்திருந்தார். பிரிந்தாவனத்தில் தீர்த்த யாத்திரை சென்ற சமயம் தன்னை மறந்து பல இடங்களில் இறைவனுடன் ஐக்கியப் படுவதற்காக பலதூரம் நடந்து திரிந்தார் இவரைக் காணாது தேடிய சீடர்கள் மிகவும் பிரயாசைப் பட்டு திரும்ப அழைத்து வந்தார்கள். ஆனால் அவரோ ஒருவரைஇழந்ததாகவும் இறைவன்எங்கே,எங்கே? என்ற தாகம் கொண்டிருப்பதை சீடர்கள் அவதானித்தார்கள்

## இந்து மதத்தின் கோட்பாடுகள்

இந்து சமயத்தின் அடிப்படை தத்துவமான சனாதன தர்மத்தை எப்படி அனுஷ்டித்து மக்களுக்கு புகட்டினார் விளக்கமாக இங்குதர வாய்ப்பில்லை. உயர்ந்த அத்வைத நிலையிலிருந்து சாதாரணமான கிராமிய பக்தி வரைக்கும் உள்ள எல்லா நிலைகளையும் பூரணமாக அனுஷ்டித்தார் இவர் அனுஷ்டித்த இந்து தர்மகோட்பாடுகளை, ஞானம், பக்தி, ஜோகம், கர்மயோகம் - இதன் வழிமுறையாக விளக்கிய பின்பு கிராமியவழிபாட்டை முறைகளை பின்பு பார்ப்போம்.

## ஞான யோகம்

தமது இளம் வயதில் ஞானம் கைவரம் பெற்றவர். இதனை விளக்க பல நிகழ்வுகள் அன்னையின் வாழ்

வில் நிதரிசனமாக உண்டு. தாரகேசுவரர் ஆலயத்துக்கு தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி தனது கணவர் புற்று நோயால் பீடிக்கப்பட்ட காரணத்தால் - அவரது நோய் தீர்ந்து மீளும் வண்ணம் இறைவனை வேண்டினார். அச்சமயம் ஆலய வளவில் பலமட்பாண்டங்கள் உடைந்து நொருங்கும் சத்தத்தையும் கேட்டார். உடனே அவருக்கு தெளிவு ஏற்பட்டது. '' இவ்வுலகில் தாயார், கணவன், சுற்றம் யாவும் அநித்தியம். இதற்குப் போய் கவலை கொள்வது நியாயம் இல்லை '' என்று கண்டார். '' எப்பொழுதும் மனத்தில் இவ்வுலகைப் பற்றியே சிந்தனை செய்வாயாக அழியும் உடலையும் பொருளையும் நாடும் மனத்தை இறைவன்பால் திருப்புவாயாக '' என்றார். மாயாவதியில் உள்ள அத்வைத ஆச்சிரம வாசிகளை நோக்கி ஸ்ரீராமகிருஷ்ணர் முழுக்க, முழுக்க அத்வைதம் என்றே ஒன்று இயம்பினார். ஏன் நீங்கள் குருதேவரின் வழியைப் பிற்பற்றக் கூடாது '' என்று வினவினார்? அன்னை பூர்ணமான வேதாந்திதான்.

## கர்மயோகம்

மிக அண்மைக் காலத்தில் வாழ்ந்த நமது அன்னை ஒப்பற்ற கர்மயோகி. கீதைபகர்ந்த ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவுக்குப் பின் அன்னை கர்மயோகத்தில் முதன்மையாக விளங்குகின்றார்கள்.

எனது இளமைக்காலத்தில் நான் எவ்வளவு கடமைகளைச் செய்துள்ளேன். இதற்கு இடையில் ஆயிரம் ஆயிரம் தடவை மந்திரங்களை ஜபித்து வருவேன். ஒரு மனிதன் செய்யும் சிறிய சிறிய தன்னலமற்ற சேவையைக் கொண்டு அவனது மனநிலையை எடை போடலாம். பலரின் பார்வைக்கும் ஆடம்பரமான வைபவங்களிலும் அவனது செய்கையை எடைபோடுவது சிரமமானது. குருவுக்கு சேவை செய்யும் பொழுது குருவின் கடாட்சத்தால் பெருமை பெற வேண்டும்.

அதனை விடுத்து குருவை அடக்கி ஆளநினைக்கக் கூடாது.

## பக்தியோகம்

பிரேமபக்தி தொடக்கம் சாதாரண பக்தியின் இருப்பிடமாக அன்னையின் செயல்கள் வடிவெடுத்தன. மகாபாவ நிலையை அடைந்தும் கூட அன்னை தின மும் பூஜை வழிபாடு செய்து வருவார். உருவவழி பாட்டில் அன்னை ரொம்பவும் நம்பிக்கை வைத்திருந் தார். பலசமய குரவர்கள் சாதனையானர்கள் ஆண் டாண்டு தோறும் உருவ வழிபாட்டின் பயனை அடைந் திருக்கிறார்கள். உருவவழிபாடு என்ன அவ்வளவு விலையில்லா பொருளா? ஸ்ரீராமகிருஷ்ணர் உருவவழி பாடு, அருவவழிபாடு இரண்டையும் சமமாகப் பார்த் தார். ஸ்ரீராமகிஷ்ணரிடத்தில் விகல்பமான கொள்கை கள் கிடையா. பக்தியில் உள்ள பாவனைகள் தாசிய சாந்த, மதுர வாத்சல்ய தோழமை அனைத்தும் அன்னை கைவரப் பெற்றவர். அன்னையிடத்தில் காணப்பெற்ற பக்தி நிலையை விபரிக்க முடியாது. அது ஒரு பெரிய பொக்கிஷம்.

## ராஜ யோகம்

ராஜயோகத்தில் கூறப்பட்ட ஆரம்ப படிகளைச் கடந்து தியான நிலையை எளிதில் அடையப் பெற்றவர் சமாதிநிலை அவருக்கு அடிக்கடி தன்னிச்சையாக தோன்றும். அவர் அதனை தடுக்க பாடுபடுவார். தியான நிலைக்கு சென்று சமாதி கூடிவிட்டால் இவரை இயல்புநிலைக்கு கொண்டுவருவது எளிதானகாரியமல்ல.

## கிராமிய சம்பிரதாயங்களும் கிரியைகளும்

“ அன்னை தான் ஒன்றையும் அழிக்க வரவில்லை பூரணப்படுத்தவே வந்தேன் என்பார். அது கிராமிய சடங்காக இருந்தால் என்ன? பழங்குடியினர் ஆதி

வாசிகள், இவர்களது சம்பிரதாயமாக இருந்தால் என்ன யாவற்றையும் போற்றி அனுசரித்தார் கிராம்ய தெய்வங்கள், குடும்ப தெய்வங்கள், இவர்களுக்குரிய நிவேதனம் பூஜை வழிபாட்டை ஒழுங்காக நிறைவேற்றுவார். பெரியதுமான உயர்ந்த அகண்ட சச்சிதானந்த நிலையில் அன்னை ஜீவித்துக் கொண்டும் சிறிய, சிறிய செயல்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தார்.

## இனிமையான இணைப்பு

தூய அன்னை ஸ்ரீசாரதாதேவி இவ்விஞ்ஞான உலகில் உள்ளவர்கள் அதிசயிக்கத்தக்க முறையில் உயர்ந்த யோகியாகவும், பக்தையாகவும், ராணியாகவும், கர்மயோகியாகவும் எல்லா சமயக் கோட்பாடு உடையவர்கள் மெச்சத்தக்கவராக வாழ்ந்த பெருமை அன்னைக்கே உண்டு. ராமகிருஷ்ணரின் உயரிய நேர் சீடரான சாரதானந்தர் மகராஜ் அவர்களும் வீடு உடைத்து திருடும் (DACOIT) அம்ஜத் - இருவரும் அன்னைக்கு பிள்ளைகள் தான். இருவருக்கும் இடையில் வேறுபாட்டை அன்னை காணவில்லை.

அன்னையின் வாழ்வு எளிமையானதும் தனித்தன்மை பொருந்தியதும் ஆத்மீக வாழ்வில் ஒரு பெரிய இடத்தைப் பிடித்து விட்டது. ஸ்ரீராமகிருஷ்ணரைப் போன்று எல்லா மதங்களையும் வெளிப்படையாக அவர் அனுஷ்டிக்கவில்லை. இவரது எளிமையான வாழ்வு, கனிவான பேச்சு, அன்பு ததும்பும் பார்வை தன்னலமற்ற சேவை உயர்ந்த தாயாக அரவணைப்பு இவையாவும் எவரையும் கவரும் சக்தியுடையது. உலக நன்மைக்காக பராசக்தியாக வடிவெடுத்த நமது அன்னை யாவர்க்கும் சொந்தம். இதில் ஓர் ஐயப்பாடு ஏன்? தாயை வணங்கி உயர்வடைவோமாக.

நன்றி: பிரபுத்த பாரதம் - மார்கழி 2000

சாரதா சேவாச்சிரமத்தின் பணிக்கு எங்கள் ஆதரவு என்றும் உண்டு.

- குகன் ஸ்டுடியோ
- மகாலட்சுமி பல்பொருள் வாணிபம்
- ராஜன் வீடியோ
- ரமணன் அஞ்சல் அகம்
- சிவசம்பு களஞ்சியம்
- சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை
- பாலன் விற்பனை நிலையம்
- சுசுல் புடவை அகம்
- ஸ்ரீ முருகன் மருந்தகம்
- பாலகணேசன் களஞ்சியம்
- சுபாஸ் வெதுப்பகம்
- மலாயன் கபே
- பூபாலசிங்கம் புத்தகசாலை
- கவிதா ஸ்ரோர்ஸ்
- நீயுரோன் எலக்ரிக்கல்ஸ்
- வேணி களஞ்சியம்
- ஜெகா
- மருதம்
- சிறி திலகா
- S.M. Fernando
- Cannon photo copying
- Siva Trading Co.
- ஜெயகணேசா ஸ்ரோஸ்
- பாலவிநாயகர்

வெளியிடப்பட்டது

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை



இந்த ஆண்டில் எங்கள் சேவை